உறுப்பினரையும் தேர்ந்தெடுக்க வேண்டும். அவைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 3 ஆண்டுகளாகும்.

முற்பகல் 10-50

தமிழ்நாடு அநாதை இல்லங்கள் மற்றும் கருணை இல்லங்கள் நிர்வாகக் குழுவிற்கு 3 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும். எனினும், குறிப்பிட்ட ஆட்சி மன்றப் பேரவைகள் மற்றும் ஆட்சிக் குழு-நிர்வாகக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவர்களுடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும். தேர்ந்தெடுக்கப்பட விழையும் வேட்பாளர்கள், நியமனத் தாள்களை 8-8-1996 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் 9-8-1996 அன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகின்ற வேட்பாளர்கள் 10-8-1996 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கையைவிட மேற்படுமாயின் 16-8-1996 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் இடையே சென்னை சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில், குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(ஆ) பேரவை அலுவல் குறித்து

பேரவைக்கு அடுத்த அறிவிப்பு. 3-8-1996 ஆம் நாளன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன:

7-8-1996 அன்று பேரவை மாலையிலும் 4-30 மணிக்குக் கூடும். அப்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் 1-8-1996 அன்று பேரவையில் அறிமுகம் செய்யப்பட்ட இரண்டு சட்டமுன்வடிவுகளும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அடுத்து, 3-8-96 அன்று பேரவையில் வைக்கப்பெற்ற 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மற்றும் 1995-96-க்கான திருத்திய மதிப்பீடுகள் மீதான விவாதம் பேரவையின் அடுத்த கூட்டத் தொடரில் எடுத்துக் கொள்ளப்படும்.